14.03.2025

OS No: 567/2019

வா.சா.3 திரு. சுப்பிரமணியன் , த/பெ. மகாலிங்கம்

**<u>3,4ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு சொந்த ஊர் எது என்றால் மட்டாகுளம் கிராமம் ஆகும். தாவா சொத்து குறித்து எனக்கு விபரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து ஆதியில் குஞ்சரம்மாளுக்கு பாத்தியமான சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தை ஆதியில் குஞ்சரம்மாள் உயிருடன் இருக்கும்போது பாகம் பிரித்து கொடுத்துவிட்டார். நான் சொல்வதுபோன்று பாகம் எதுவும் குஞ்சரம்மாள் பிரிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை குஞ்சரம்மாள் வாய்மொழியாக பாகம் பிரித்ததாக நான் சொல்லும் சங்கதியை மேற்படி பாகம் பிரித்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது ஊருக்கும், தாவா சொத்து உள்ள இடத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 2 1/2 மைல் இருக்கும். என்னை யார் சாட்சியம் அளிக்க கூப்பிட்டார்கள் என்றால் ஜெகநாதனுக்கு தாவா சொத்தை நான் கிரையம் வாங்கி கொடுத்தேன் அதனால் ஜெகநாதனின் மனைவி என்னை சாட்சியம் அளிக்க கூப்பிட்டார். ஜெகநாதனின் மனைவியை எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சாட்சியம் அளித்த வா.சா.2 மணி எனக்கு உறவினரா என்றால் சொந்தக்காரர் ஆவார். வக்கீலுக்கு எனது நிருபணவாக்குமூல சங்கதிகளை யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். தாவா சொத்தை வாதி ஜெகநாதன் கிரையம் வாங்கிய காலத்தில் நான் பத்திர

அலுவலகத்தில் இருந்தேனா என்றால் கிரையம் பேசி முடிக்கையில் நான் இருந்தேன், 2வது சாட்சி மணி அங்கு வரவில்லை. 1ம் பிரதிவாதி மற்றும் 2ம் பிரதிவாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி மற்றும் 2ம் பிரதிவாதி ஆகியோருக்கிடையே காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து சம்மந்தமாக எனக்கு விபரம் தெரியாது என்றும், அவ்வாறு இருந்தும் என்னை வா.சா.2 மணி அவர்கள் சாட்சியமளிக்க அழைத்து வந்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.03.14 17:48:30 +0530